# தமிழர் தகவல்

## TAMILS' INFORMATION


புகழினியின் உயிர் ஊசலாடுகிறது


பரீட்சையில் சித்தி


மெழுகுவர்த்தி பிரார்த்தனை


ரீட்டாவுக்கு புதிய பதவி

இலங்கையரின் அகதிநிலை மனுக்கள் நிராகரிக்கப்படுவது அதிகரிக்கிறது ■ நிரந்தர குடியிருப்பாளரும் பொலிஸ் பதவிக்கு விண்ணப்பிக்கலாம். ■ மாதாந்த பொதுநல உதவித்திட்டம் - புதிய நடை முறை ■ WELFARE-NEW INCOME REPORTING SYSTEM ■ உயிருடன் ஊசலாடுகிறுர் பதினாறு வயது யுவதி புகழினி ■ அகதிகள் தேக்கத்துக்கு நீதி கோரி பிரார்த்தனை ■ ஈழத்தமிழர் உயிர் காக்க வேண்டி உண்ணாவிரதம் ■ பராமரித்துப் பொறுப்பேற்கும் SPONSOR நடைமுறையில் சிறு மாற்றம் ■ தமிழர்களுக்கான சேவையில் கத்தோலிக்க குடிவரவு நிலையம் ■ தேக்க நிலை அகதிகள் பிரச்சனை ■ BACKLOG REFUGEES ■ பொங்கல் விழா ■ கவிதைத் தொகுதி வெளியீடு ■ பரீட்சையில் சித்தி ■ ரீட்டாவுக்கு புதிய பதவி ■ அன்னை பூபதி கலண்டர் ■ சட்ட உதவி நிலையங்கள் ■ இலங்கையரின் அகதிநிலை மனுக்கள் நிராகரிக்கப்படுவது அதிகரிக்கிறது ■ நிரந்தர குடியிருப்பாளரும் பொலிஸ் பதவிக்கு விண்ணப்பிக்கலாம். ■ மாதாந்த பொதுநல உதவித்திட்டம் - புதிய நடை முறை ■ WELFARE-NEW INCOME REPORTING SYSTEM ■ உயிருடன் ஊசலாடுகிறுர் பதினாறு வயது யுவதி புகழினி ■ அகதிகள் தேக்கத்துக்கு நீதி கோரி பிரார்த்தனை ■ ஈழத்தமிழர் உயிர் காக்க வேண்டி உண்ணாவிரதம் ■ பராமரித்துப் பொறுப்பேற்கும் SPONSOR நடைமுறையில் சிறு மாற்றம் ■ தமிழர்களுக்கான சேவையில் கத்தோலிக்க குடிவரவு நிலையம் ■ தேக்க நிலை அகதிகள் பிரச்சனை ■ BACKLOG REFUGEES ■ பொங்கல் விழா ■ கவிதைத் தொகுதி வெளியீடு ■ பரீட்சையில் சித்தி ■ ரீட்டாவுக்கு புதிய பதவி ■ அன்னை பூபதி கலண்டர் ■ சட்ட உதவி நிலையங்கள் ■ இலங்கையரின் அகதிநிலை மனுக்கள் நிராகரிக்கப்படுவது அதிகரிக்கிறது ■ நிரந்தர குடியிருப்பாளரும் பொலிஸ் பதவிக்கு விண்ணப்பிக்கலாம். ■ மாதாந்த பொதுநல உதவித்திட்டம் - புதிய நடை முறை ■ WELFARE-NEW INCOME REPORTING SYSTEM ■ உயிருடன் ஊசலாடுகிறுர் பதினாறு வயது யுவதி புகழினி ■ அகதிகள் தேக்கத்துக்கு நீதி கோரி பிரார்த்தனை ■ ஈழத்தமிழர் உயிர் காக்க வேண்டி உண்ணாவிரதம் ■ பராமரித்துப் பொறுப்பேற்கும் SPONSOR நடைமுறையில் சிறு மாற்றம் ■ தமிழர்களுக்கான சேவையில் கத்தோலிக்க குடிவரவு நிலையம் ■ தேக்க நிலை அகதிகள் பிரச்சனை ■ BACKLOG REFU-

இதழ்
ISSUE
1

பெப்ரவரி
1991
FEBRUARY

இது ஒரு மாதாந்த தகவல் மஞ்சரி • A MONTHLY INFORMATION DIGEST

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தமிழர் தகவல்**
P.O. Box - 3, Station 'F'
Toronto, Ontario
M4Y 2L4
Phone: **(416) 920-9250**

**தயாரிப்பு**
ஈழத்தமிழர் தகவல் நிலையம்
ரொறன்ரோ

**வெளியீடு**
தமிழர் தகவல் ஆய்வுப் பிரிவு

**வடிவமைப்பு**
அகிலன் அசோஷியேட்ஸ்

**ஆசிரியர்**
எஸ்.திருச்செல்வம்

**தயாரிப்பு உதவி**
ரஞ்சி

**விநியோக முகாமையாளர்**
எஸ். ரி. சிங்கம்
தொலைபேசி: (416)921-7076

**படங்கள்**
பரன், முகன்

**அச்சுப்பதிப்பு**
றிப்ளக்ஸ் பிரிண்டிங்
(416) 975-0196

**TAMILS' INFORMATION**
P.O. Box - 3, Station 'F'
Toronto, Ontario
M4Y 2L4
Phone: **(416) 920-9250**

**Produced by**
EELAM THAMIL INFORMATION CENTRE OF TORONTO (ETHIC)

**Published by**
THAMIL INFORMATION & RESEARCH UNIT (THIRU)

**Design**
AHILAN ASSOCIATES

**Editor**
THIRU S. THIRUCHELVAM

**Production Asst.**
RANJI

**Circulation Manager**
S. T. SINGAM
(416) 921-7076

**Photos**
PARAN & MUGAN

**Layout & Printers**
REFLEX PRINTING
(416) 975-0196

## *ஆசிரியரிடமிருந்து....................FROM THE EDITOR*

கனடாவில் சுமார் நாற்பத்தையாயிரம் (45,000) வரையிலான தமிழ் மக்கள் வசிப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது தொடர்பான புள்ளிவிபர சேகரிப்பு இதுவரை எந்த மட்டத்திலும் இங்கு மேற்கொள்ளப்படாததால், சரியான தொகையை எங்கும் பெறமுடியாது. சிலவேளையில் இந்தத் தொகை, குறைவான மதிப்பீடாகவும் இருக்கலாம்.

மேற்குறிப்பிட்ட தொகையில் , சுமார் எழுபத்தைந்து (75) வீதமானவர்களும் ரொறன்ரோ பெரும்பாகப் பகுதியில் வசித்து வருகின்றனர். மொத்தத்தில், பெருந்தொகையான தமிழர்களும், சொந்த நாட்டு அரசியல் காரணிகளால் இங்கு அகதிகளாக வந்தவர்களாவர்.

கனடாவில் வாழும் தமிழர்களை, அவர்களது குடியுரிமையை மையமாக வைத்து நான்கு வகையாகப் பிரிக்கலாம். அகதி நிலை (Refugee Claimants) கோரி நிற்பவர்கள், ஒப்பந்தப்படி ஏற்கப்பட்ட அகதிகள் (Conventional Refugees) நிரந்தர குடியிருப்பு உரிமை பெற்றவர்கள் (Landed Immigrants), கனடிய பிராஜாவுரிமை பெற்றவர்கள் (Canadian Citizens) என்று இந்த நான்கு வகையும் அடங்கும். இவர்களுள் பெரும்பான்மையானவர்கள் முதல் இரண்டு பிரிவையையும் சேர்ந்தவர்கள்.

கனடிய மத்திய அரசாங்கமும், மாநில அரசாங்கங்களும், மாநகர நிர்வாக அமைப்புகளும் இங்கு வந்து குடியேறும் மக்கள் நலன் கருதி, பல்வேறு புதிய திட்டங்களை அமுலுக்குக் கொண்டு வருவது வழக்கம். இவற்றுள் அநேகமானவை அன்றாட தேவைகளுடன் சம்பந்தப்பட்டவை. குடிவரவு (Immigration) சமூக உதவி (Social Assistance), குடும்ப உதவிப்பணம் (Family Allowance), நலன் புரி உதவி (Welfare), சுகாதார வைத்திய வசதி (OHIP), வேலைப் பயிற்சி (Job Training), மாணவர்-வளர்ந்தோர் கல்வி (Students-Adult Education), வேலையற்றோர் காப்புறுதி (Unemployment Insurance), வீட்டு வசதி (Housing) போன்றவைகள் இவற்றுள் முக்கியமானவை.

மேற்குறிப்பிட்டவை உட்பட பல்வேறு சேவைகளுடன் சம்பந்தப்பட்ட தகவல்கள், பிரசுரங்கள், வெளியீடுகள் போன்ற அச்சுப் பதிவுகள், பெரும்பாலும் ஆங்கிலம், பிரெஞ்சு ஆகிய மொழிகளில் மட்டுமே அரசாங்க நிறுவனங்களால் வெளியிடப்பெற்று வருகின்றன. இதனால், இவ்விரு மொழிகளையும் நன்கு புரியாதவர்கள், அரசாங்கத்தின் சேவைகளைச் சரியாகப் பயன்படுத்த முடியாத நிலையேற்படுகின்றது. அநேகமான தமிழர்கள், இவ்வாறான நிலையிலேயே இங்கு வாழ்ந்து கொண்டிருப்பது தவிர்க்க முடியாததாகியுள்ளது.

இதன் காரணத்தினால், இவ்வாறன தகவல் பிரசுரமொன்றை எங்கள் தாய்மொழியில் வெளியிட வேண்டிய தேவை இன்று ஏற்பட்டுள்ளது. அரசாங்கம் வழங்கும் சேவைகள் அடிக்கடி மாற்றப்படுவதாலும், புதிய திட்டங்கள் புதிது புதிதாக அமலுக்கு வருவதாலும், அனைத்தையும் ஒரு நூலாக வெளியிடுவது சாத்தியமற்றது. இதனால், புதிய புதிய தகவல்கள், விபரங்களையும் உள்ளடக்கியதாக தமிழர் தகவலை மாதா மாதம் வெளியிடலாமென ஆலோசித்துள்ளோம்.

கனடாவிலும் முக்கியமாக ரொறன்ரோ பெரும் பாகத்திலும், மிஸிஸாகா பிரதேசத்திலும் தமிழ் மக்கள் சம்பந்தப்பட்டதாக நடைபெறும் நிகழ்வுகளையும் உள்ளடக்கியதாக "தமிழர் தகவல்" அமைவது பொருத்தமானதென்று கருதுகின்றோம். இயலுமான வரை அவைகளையும் சேர்க்க முயற்சிப்போம்.

காலத்தின் தேவையுடன் இணைந்த சேவையாகக் கருதி இந்தப் பணியில் பாதம் பதிக்கின்றோம்.

தமிழிலேயே இதனை முற்று முழுதாகத் தயாரிக்க வேண்டுமென்று விரும்பிய போதிலும், சில தகவல்கள், விபரங்களை அனைவரும் முழுமையாகப் புரிந்து கொள்ள வேண்டுமென்ற நோக்குடன் சில சந்தர்ப்பங்களில் ஆங்கிலப் பதங்களும் சேர்க்க வேண்டியது அவசியமாகிறது.

**எஸ்.திருச்செல்வம்**

---

A total number of Tamils living in Canada today is estimated at 45,000 approximately. About 75 percent of this Tamil population live in Metropolitan Toronto. Many of the Tamils entered Canada as Refugees for political reasons.

The civic status of Tamils in Canada can be classified as follows: Refugee claimants, Conventional Refugees, Permanent Residents (Landed), andCanadian Citizens.

The Government of Canada- Federal, Provincial, Metro - has formulated and introduced several schemes for the Refugees and Immigrants in Canada. These Schemes range from Immigration, Welfare, OHIP, Family Allowance, Social Assistance, Job Start Programs, Students - Adult Education, Housing, Unemployment Insurance, Etc.....

Most of the publications of these Assistance Programs are printed by Government Institutions in English and French- the official languages of the Country.

This is in impediment to the non-proficent Immigrant Tamils in Canada, who have not been able to know, understand and benefit fully the services offered. This is an unfortunate situation.

The main objective of the publication "Tamils' Information" is to make aware of the various schemes of assistance offered, and to update the information monthly, on all important matters.

Educational, Social and Cultural activities such as seminars, workshops and multifaceted programs of interest to Tamils will be incorporated in this publication, whenever it is needed.

For the sake of clarity, English terms will also appear wherever necessary.

Government Institutions, Tamil Organisations and other Community Service Groups are welcome to send their activities, and updated information for inclusion.

It is important for every Tamil to realise that this publication encounters cost and manpower. Nevertheless, it is considered that this is an imperative commitment by us to every Tamil in Canada.

Thiru S. Thiruchelvam



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிரந்தர குடியிருப்பாளரும் பொலிஸ் பதவிக்கு விண்ணப்பிக்கலாம்



மெற்ரோ பொலிற்றன் ரொறன்ரோ பொலிஸ் படையில், பொலிஸ் கான்ஸ்டபிளாகவும் (Constable) கடேற்றுகவும் (Cadet) சேருவதற்கு விண்ணப்பம் செய்வதற்குத் தேவையான அடிப்படைத் தகுதிகளில் சிறு மாற்றம் கொண்டு வரப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் கனடிய பிரஜாவுரிமை பெற்றவர்கள் மட்டுமே மேற்படி பதவிகளுக்கு விண்ணப்பம் செய்ய முடியும். 1991 ஜனவரியிலிருந்து கொண்டு வரப்பட்டுள்ள மாற்றத்தின் பிரகாரம், கனடாவில் நிரந்தர குடியிருப்பாளருக்கான (Permanent Resident) உரிமை பெற்றவர்களும் மேற்படி பதவிகளுக்கு விண்ணப்பிக்க முடியும்.

இந்தப் புதிய ஒழுங்கின் பிரகாரம், இங்கு வசிக்கும் பெருமளவிலான பல இன, சிறு பான்மைச் சமூகங்களைச் சேர்ந்தவர்கள் பொலிஸ் கான்ஸ்டபிள்களாகவும், கடேற்றுக வும் சேருவதற்குச் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

பொலிஸ் கான்ஸ்டபிள் பதவிக்கு விண்ணப்பிப்பவர்கள் இருபத்தியொரு வயதுக்கு மேற்பட்டவர்களாக இருக்க வேண்டும். இப் பதவிக்கான வருடாந்தச் சம்பளம் $31,633 லிருந்து $48,000 வரை.

பொலிஸ் கடேற் பதவிக்கு விண்ணப்பிப்பவர் கள் பதினெட்டு வயதுக்கும் இருபத்தியொரு வயதுக்கும் இடைப்பட்டவர்களாக இருக்க வேண்டும். இதற்கான வருடாந்தச் சம்பளம் $26,852 லிருந்து $31,663 வரை.

இப்பதவிகள் தொடர்பான பூரண விபரங்களனைத்தையும் கீழுள்ள முகவரியில் பெறலாம்.

மெற்ரோ பொலிற்றன் ரொறன்ரோ பொலிஸ் படை

**The Metropolitan Toronto Police Force**
Employment office
40, College St. Toronto, Ontario,
M5G 2J3
Telephone: **324-6015**

# மாதாந்த பொது நல உதவித் திட்டம் வருமானம் அறிவிக்க புதிய முறை

## GENERAL WELFARE ASSISTANCE: NEW INCOME REPORTING SYSYTEM

மெற்ரோ பொலிட்டன் ரொறன்ரோ மாநகர மன்றத்தின் சமூக சேவைப் பிரிவு மாதா மாதம் வழங்கும் பொது நல உதவித் திட்டத்தில் (General Welfare Assistance) சில முக்கியமான மாற்றங்கள் கொண்டு வரப்பட்டுள்ளது. இந்தப் புதிய மாற்றத்தினுல் மேற்படி திட்டத்தின் கீழ் உதவிப் பணம் பெறுபவர்கள் மாதாந்தம் தங்கள் வருமானத்தை அறிவிக்கும் முறை இலகுவாக்கப்படுகின்றது.

இதுவரை காலமும் அமுலில் இருந்த முறை பின்வருமாறு அமைந்திருந்தது:
ஒருவருடைய அல்லது குடும்பத்தினது மாதாந்த உதவித் தொகைக்கான காசோலை தபால் மூலம் மாதத்தின் கடைசி வாரத்தில் கிடைத்து வரும். இது நான்கு பிரிவுகளைக் கொண்டதாக இருக்கும். காசோலை, காசோலையின் விபரங்களைக் கொண்ட அட்டை, மருந்து பெறுவதற்கான மாதாந்த அட்டை, மற்றும் மாதாந்த வருமானத்தைத் தெரிவிப்பதற்கான விபரங்களை நிரப்பி அனுப்பும் அட்டை என்பன குறிப்பிட்ட நான்கு பிரிவுகளாகும்.

வருமானத்தை அறிவிக்கும் விபர அட்டையை பூரணமாகவும், சரியாகவும் நிரப்பி அந்தந்த மாதம் 16ம் திகதியன்று சமூக சேவைப் பிரிவுக்கு தபாலில் அனுப்ப வேண்டும். இதற்கான தபால் உறை (Envelope) யும் காசோலையுடன் அனுப்பப்படுவது வழக்கம்.

இந்த அட்டையை சரியாக நிரப்பாது விட்டால் அல்லது குறித்த தினத்தன்று தபாலில் அனுப்பாது விட்டால் சம்பந்தப்பட்டவர்களுக்கு குறித்த மாத காசோலை கிடைப்பதில் தாமதம் ஏற்படும்.

இந்தப் பிரச்சனைகளிலிருந்து பணம் பெறுபவர் களை நீக்குவதற்காகவே புதிய திட்டம் அமலாவ தாக சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இவ்வருடம் பெப்ரவரி மாதம் முதலாம் திகதிக்குப் பின்னர், வருமானத்தை அறிவிக்கும் அட்டை காசோலையுடன் இணைக்கப்பட்டிராது. இந்த அட் டையை 16ம் திகதி திருப்பி அனுப்புவதற்கான தபால் உறை (என்பலப்) யும் அதற்குள் இருக்காது. எனவே இவைகள் தங்களுக்கு வரவில்லை என்று எங்கும் சென்றும் விசாரிக்க வேண்டியதில்லை.

இதற்குப் பதிலாக ஒவ்வொரு மாதமும் 11ம் திகதி, பணம் பெறும் ஒவ்வொருவருக்கும் தனியான பத்திரமொன்று தபாலில் அனுப்பப்படும். தங்கள் முகவரி, தொலைபேசி இலக்கம், வருமானம் ஆகியவைகளல் ஏதாவது மாற்றமிருந்தால் மட்டும் இந்தப் பத்திரத்தை நிரப்பி, அதற்குள்ளிருக்கும் தபால் உறைக்குள் வைத்து அனுப்ப வேண்டும். மாற்றங்கள் எதுவுமில்லையெனில் அனுப்ப வேண்டியதில்லை.

சுருக்கமாகச் சொல்வதானுல், உதவித் திட்டப் பணம் பெறுபவர்கள், தங்களுடன் சம்பந்தப்பட்ட விபரங்களில் ஏதாவது மாற்றமிருந்தால் தவிர, இனிமேல் மாதா மாதம் எந்தப் பத்திரங்களையும் நிரப்பி அனுப்பாமலே தங்கள் காசோலையை தபாலில் பெற இந்தப் புதிய முறை வழி வகுக்கின்றது. இதனை விளக்கும் ஆங்கிலப் பிரசுரம் இந்த மாதக் காசோலையுடன் அனைவருக்கும் அனுப்பப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களை 397-0201 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பெறலாம்.

# பரீட்சையில் சித்தி



டாக்டர் அ. சண்முகவடிவேல் அண்மையில் கனடா தேசிய பல் சிகிச்சைச் சபையினரின் சகல பரீட்சைகளிலும் சித்தியடைந்து, இங்கு பல் வைத்தியராகச் சேவை புரிவதற்கான அங்கீகாரத்தைப் பெற்றுள்ளார்.

1971 ம் ஆண்டு இலங்கை சர்வகலாசாலையில் பல் வைத்தியராக கல்வி பயின்று சித்தியடைந்த பின்னர் இலங்கையின் பல பாகங்களிலும் பல் வைத்திய அதிகாரியாகக் கடமையாற்றிய இவர், பின்னர் நைஜீரியா, இங்கிலாந்து ஆகிய நாடுகளிலும் இதே துறையில் சிறப்பாக பணிபுரிந்துள்ளார்.

கனடாவில் மேற்படி பரீட்சையில் சித்தியடைந்த முதலாவது ஈழத் தமிழ் மகன் இவரே என்று தெரியவந்துள்ளது. பருத்தித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட டாக்டர் சண்முகவடிவேல் நைஜீரியாவிலும், கனடாவிலும் தமிழர்களுடன் சம்பந்தப்பட்ட பல பொதுப் பணி அமைப்புகளில் நிரம்பிய பங்களிப்புச் செய்தவராவர்.

இவர் ரொறன்ரோவில் பல் வைத்தியராகத் தமது சேவையினை ஆரம்பித்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களுக்கான சேவையில் கத்தோலிக்க குடிவரவு நிலையம்

கனடாவுக்குப் புதிதாக வந்து குடியேறுபவர்களுக்கு சேவை புரிந்து வரும் நிறுவனங்களில் கத்தோலிக்க குடிவரவு நிலையம் (Catholic Immigration Bureau) முக்கியமான இடத்தைப் பெற்று வருகின்றது. இதன் தலைமை அலுவலகம் ரொறன்ரோ நகரின் ஜங்க் வீதியில் அமைந்துள்ளது. பிராந்திய சேவை நிலையங்கள் ரொறன்ரோ, ஸ்காபரோ, மிஸிஸாகா, பிராம்டன் ஆகிய இடங்களில் ஆறு ஸ்தானங்களில் அமைந்துள்ளன.

இவைகளுக்குள் தமிழ் மக்களுக்குக் கூடுதலாக சேவை புரியும் நிலையமாக ஸ்காபரோ கத்தோலிக்க குடிவரவு நிலையம் (Catholic Immigration Bureau Scarborough) செயற்பட்டு வருகின்றது. இதற்கு முக்கியமான பல காரணங்களுண்டு.

ஸ்காபரோ குடிவரவு இல்லத்தில் (Welcome House) முன்னர் தமிழ் பேசும் ஆலோசகர் பணிபுரிந்து வந்தார். அவர் கடந்த வருட பிற்பகுதியில் வேறு பதவிக்குச் சென்று விட்டார். அதன் பின்னர் தமிழ் பேசும் எவரும் அங்கு நியமிக்கப்படவில்லை.

அதேசமயம் ஸ்காபரோ கத்தோலிக்க குடிவரவு நிலையத்தில் தமிழ் பேசும் Settlement Counsellor ஒருவர் கடந்த செப்டெம்பர் முதல் பணிபுரிந்து வருகின்றார். அது மட்டுமன்றி, ஸ்காபரோ பகுதியில் தமிழ் மக்களுக்கு இத்துறையில் பணிபுரியும் சேவை நிறுவனங்கள் எதுவும் இல்லாததும் குறிப்பிடத்தக்கது.

இதன் காரணங்களால் ஸ்காபரோ கத்தோலிக்க குடிவரவு நிலையத்துக்கு தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகச் செல்லும் தமிழர்கள் தொகை அதிகரித்து வருகின்றது. இவர்களுள் அநேகமானவர்களும் குடிவரவு, தொழில் பயிற்சி, வீடு வசதி, பத்திரங்கள் பூர்த்தி செய்தல், மொழி பெயர்ப்பு போன்ற தேவைகளுக்காகவே அங்கு விஜயம் செய்வதாக நிலையத்தின் பணிப்பாளர் தெரிவிக்கின்றார்.

கடந்த 4 மாதங்களாக மேற்படி நிலையம் வழங்கிய சேவைகளின் புள்ளி விபரங்களின்படி, சராசரியாக நாளொன்றுக்கு ஆகக்குறைந்தது பதினைந்து தமிழர்கள் மேற்படி நிலையத்துடன் தொடர்பு கொள்கின்றனர். சராசரியாக நாளொன்றுக்கு நான்கு தமிழர்கள் நேரடி ஆலோசனைகள் பெறுவதற்காகச் செல்கின்றனர்.

அதேசமயம் கனடாவில் புதிதாக தொழிலை ஆரம்பிப்பவர்களுக்கான தொழிற் பயிற்சி வகுப்புகளும் இங்கு நடத்தப்படுகின்றது. தெரிவு செய்யப்படும் ஒவ்வொரு குழுவுக்கும் ஏழு வார காலம் பயிற்சி அளிக்கப்படுகின்றது.

அக்டோபர் - நவம்பர் நடத்தப்பட்ட பயிற்சி முகாமில் பங்குபற்றிய பதினெட்டுப் பேரில் ஒன்பது பேர் தமிழர்கள் என்பதும், டிசம்பர் - ஜனவரி மாதங்களில் நடைபெற்ற பயிற்சி முகாமில் பங்குபற்றிய பத்தொன்பது பேரில் பத்துப் பேர் தமிழர்கள் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. மூன்றாவது பயிற்சி முகாம் இம்மாதம் இரண்டாம் வாரம் ஆரம்பமாகின்றது. இதில் பங்குபற்றவும் கூடுதலான தமிழர்கள் பதிவு செய்துள்ளனர்.

மேற்படி நிலையம் ஸ்காபரோவில் அமைந்திருப்பதால் ஸ்காபரோ மக்களுக்கு மட்டும் சேவையளிப்பதென்றதில்லை. ரொறன்ரோ, மிஸிஸாகா, எட்டோபிக்கோ பகுதிகளிலிருந்தும் பொதுமக்கள் இங்கு சேவை பெறச் செல்கின்றனர்.

பெயரளவில் கத்தோலிக்க குடிவரவு நிலையம் என்று அமைந்துள்ள போதிலும், பலமத மக்களும் இங்கு சேவை பெறுகின்றனர். எந்த நாட்டிலிருந்து வருபவர்களும், எந்த மதத்தைச் சேர்ந்தவர்களும், தங்கள் தேவைகளுக்கு மேற்படி நிலையத்துடன் தொடர்பு கொள்ளலாம்.

அலுவலக முகவரி: 47 Herron Avenue, Scarborough, Ontario, M1L 3V8
தொலைபேசி (416) 757-7010
அலுவலக நேரம்: கிழமை நாட்களில்
காலை 9.00 மணி முதல் பிற்பகல் 5 மணி வரை.


இறக்குமதி செய்யப்பட்ட இலங்கை இந்திய உணவு வகைகள்
தமிழக மாத, வார சஞ்சிகைகள்
இலங்கையின் தமிழ், ஆங்கில பத்திரிகைகள்
பழைய புதிய பாடல்களின் ஒலிப்பதிவு நாடாக்கள், C.Dகள்
பழைய புதிய தமிழ் வீடியோ படங்கள்
மரக்கறி வகைகள், பால், பழவகைகள்

அனைத்தையும் ஒருங்கு சேர பெற

**ஜெயா அன் பிரதர்ஸ்**

588 பார்லிமென்ட் வீதி, (வெலஸ்லி சந்தி) ரொறன்ரோ
தொலைபேசி **(416) 920-9226, / 960-9632 / 920-0998**
**Fax: 920-1089**

ஜெயா அன் பிரதர்ஸ் வழங்கும் தமிழ்த் திரைப்படங்களை ஜெராட் வீதி கிழக்கிலுள்ள
**ராஜா தியேட்டரில்** (இந்தியா தியேட்டர்)
வெள்ளி, சனி, ஞாயிறு நாட்களில் பார்த்து மகிழலாம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிருடன் ஊசலாடுகிறுர்

## பதிறுறு வயதுச் சிறுமி புகழினி
## இவருக்கு இருதயம் வலது புறத்தில்

புகழினிக்குப் பதிறுறு வயது. யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள கரவெட்டியில் ஞானசிரியர் கல்லூரியில் பதினேராம் ஆண்டில் கல்வி பயின்று வருகிறுர். படிப்பில் கெட்டிக் காரியான இச்சிறுமி வாழ்வின் வசந்தத்தில் காலடி வைத்துள்ள வேளையில் இயற்கை செய்த சதி தெரிய வந்துள்ளது. இதனுல் இருண்டகாலத்தை எதிர்கொள்ள வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு உள்ளாகியுள்ளார்.



சில மாதங்களுக்கு முன்னர் இவருக்குக் காய்ச்சல் ஏற்பட்டது. அதனைத் தொடர்ந்து இரத்த வாந்தி எடுத்தார். அழும்போது இவரது உடல் நீல நிறமாக மாறியதும் அவதானிக்கப்பட்டது. யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி டாக்டர்கள் இவரைத் தீவிர பரிசோதனைக்குட்படுத்தினர். அப்போதுதான் இவருக்கு இடது புறத்தில் இருக்க வேண்டிய இருதயம் வலது புறத்திலிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது

மிகுந்த சிரமத்தின் மத்தியில் சைக்கிள் மூலமும் நடந்தும் தனது தந்தையுடன் வவுனியாவரை சென்று அங்கிருந்து இவர் கொழும்பு சென்றடைந்தார். அங்கு இருதய சிகிச்சை நிபுணர்கள் இவருக்கு உடனடியாக சத்திரசிகிச்சை செய்ய வேண்டும் என்று தெரிவித்தனர். ஆனுல் இந்தச் சிகிச்சையைச் செய்யும் வசதி கொழும்பில் இல்லை. இதனுல் வெளிநாடொன்றிற்குப் புகழினியைக் கொண்டுசெல்ல வேண்டுமென்று வைத்திய நிபுணர்கள் பெற்றேருக்கு அறிவுரை கூறினுர்கள்.

ரேட்டரிக் கழகம், சர்வோதயம் போன்ற தொண்டர் நிறுவனங்கள் தம்மாலான உதவியைவழங்கின. ஸ்ரீலங்கா ஜனுதிபதியும் தமது நிதியிலிருந்து ஆறுயிரம் டாலர்களை வழங்கியுள்ளார். கனடாவின் தலைநகரான ஒட்டாவாவிலுள்ள சிவிக் ஆஸ்பத்திரி யின் இருதய சிக்கிச்சைப் பிரிவின் டாக்டர் ஒருவர் இலவசமாக சிகிச்சை அளிக்க முன்வந்துள்ளார். ஆனுல் வைத்தியசாலைச் செலவுக்கும் மற்றைய செலவுகளுக்கும் கனடிய மதிப்பின்படி 30,630 டாலர்களுக்குமேல் தேவையென தெரிவிக்கப்பட்டுள்ளது

புகழினியின் தந்தையான கார்த்திகேசு சுகுணபாலயோகன் வடபிரதேச போக்குவரத்துச் சபையில் பணிபுரிகிறுர். தென்மராட்சியில் உசன் என்ற இடத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவருக்கு ஐந்து பிள்ளைகள். இவர்களுள் புகழினி இரண்டாவதாவார். சுகுணபாலயோகனின் வருடாந்தச் சம்பளம் கனடிய மதிப்பின்படி 650 டாலர்கள் மட்டுமே. இந்த நிலையில் இவர் 30,000 டாலர்களுக்கு எங்கே போவார்?.

உயிருடன் ஊசலாடும் பதிறுறு வயதுச் சிறுமிக்கு உயிர் கொடுப்பதற்காக இந்தப் பணத்தைச் சேகரிக்கும் நற்பணியில் ரொறன்ரேவிலுள்ள டொன்மில்ஸ் தேவாலயத்தினர் இறங்கி யுள்ளனர். புகழினியைப் பாதுகாக்கும் நிதி என்ற பெயரில் இந்த அரும்பெரும் பணியை இவர்கள் ஆரம்பித்துள்ளனர்.

"இங்குள்ள மக்களின் இருதயம் விசாலமானது. இவர்கள் புகழினிக்கு உதவுவார்கள் என்ற நம்பிக்கை எமக்குண்டு" என்று கூறுகிறுர் மேற்படி தேவாலயத்தைச் சேர்ந்த பங்குக்குரவர் வண. கிறிஸ்டன்.

இதற்கான உதவியை எவரும் செய்யலாம். தொடர்பு முகவரி:

**"SAVE PUGALINI FUND"**
THE FAIRVIEW CHURCH OF GOD
C/O REV PAUL KILBURN
85 EMMETT AVE. APT 1109, TORONTO ONTARIO M6M 5A2

(ரொறன்ரோ ஸ்ரார் பத்திரிகையில் வெளியான செய்தியையும் இங்கே பிரசுரித்துள்ளோம்)

# Parishioners help ailing Sri Lankan teen

**By Jim Wilkes**
TORONTO STAR

Pugalini Suganabalayogan's heart is in the wrong place.

That's why doctors want the 16-year-old Sri Lankan girl to come to Canada for corrective surgery.

And that's why a Don Mills church is trying to raise some of the $30,000 the operation would cost.

"This is an extreme case," said Christine Jackson, a parishioner with Toronto's Fairview Church Of God.

"I believe in people and I believe people care about things like this."

Throughout her young life, the girl would turn blue or faint if she cried, but her parents never suspected she had a rare heart condition, Jackson said yesterday.

When doctors took x-rays when she developed a fever two years ago, they discovered her heart was reversed and was on the right side of her chest.

"It's a very dangerous thing for her to live with," Jackson said. "She could die without an operation to correct this."

Doctors in Sri Lanka don't perform such sophisticated surgery, she said. And the cost of the operation in North America is far beyond what her father, who earns the equivalent of only $650 a year, can afford.

The congregation of the Fairview Church of God has started a fund to help pay for lifesaving surgery. Donations will be added to money already collected in Sri Lanka, including about $6,000 donated by Sri Lanka President Ramasinghe Premadasa.


Jackson said the group has applied to the Herbie Fund at the Hospital For Sick Children to help offset the enormous costs of bringing the girl to Canada for the operation.

"People have big hearts," she said. "I know they'll help Pugalini."

Donations may be sent to the Save Pugalini Fund, The Fairview Church Of God, c/o Rev. Paul Kilburn, 85 Emmett Ave., Apt. 1109, Toronto M6M 5A2.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அகதிகள் தேக்கத்துக்கு நீதி கோரிப் பிரார்த்தனை

கனடிய அரசாங்கத்தின் குடிவரவுச் சட்டம் சரியான முறையில் அமலாக்கம் பெருததால் Backlog அதாவது, தேக்க நிலையிலுள்ள அகதிகள் பெரும் தாக்கத்துக்குள்ளாகி வருகின்றனர்.

இந்த அகதிகள் மனோவியல் ரீதியாகவும், உடல் ரீதியாகவும் பல பாதிப்புகளுக்காளாகின்றனர். இந்த விடயத்தில் ரொறன்ரோ அகதிகள் விவகார அமைப்பு (Toronto Refugee Affairs Council -TRAC) சில ஆக்க பூர்வமான நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

இவற்றுள் ஒன்று வாரா வாரம் சனிக்கிழமை தோறும் மெழுவர்த்தி ஏற்றும் நிகழ்ச்சி. தேக்க நிலை அகதிகளின் நிலைமையை கனடிய மக்களுக்கு தெரியப்படுத்துவதற்காக இந்த நிகழ்ச்சி ஏற்பாடாகியுள்ளது.

ரொறன்ரோ நகர மண்டபத்துக்கு முன்றலுள்ள நேதன் பிலிப் சதுக்கத்தில் அமைந்திருக்கும் சமாதான நந்தவனத்தில் (Peace Garden) இந்த நிகழ்ச்சி 1990 அக்டோபர் மாதம் 20ம் திகதி ஆரம்பமாகி, சனிக்கிழமைகளில் பிற்பகல் 6 மணிக்கு நடைபெற்று வருகின்றது.

தேக்க நிலை அகதிகளுக்கென புதிய ஒழுங்கு முறைகளை 1988ம் ஆண்டு டிசம்பர் மாதம் 28ம் திகதி அமைச்சர் பாபரா மக்டுகல் கொண்டு வந்த போது, இரண்டு வருடங்களில் விசாரணைகள் முடிவடைந்து விடுமென்று உறுதியளித்திருந்தார். ஆனால் 1990 டிசம்பர் 28ம் திகதி வரை ஏறத்தாழ முப்பது வீதமானவர்களின் விசாரணைகள் மட்டுமே முடிவடைந்திருந்தன. அரசாங்கத்தின் இந்தத் தோல்வியான திட்டத்தின் இரண்டாண்டு பூர்த்தியை நினைவு கூரும் வகையில் கடந்த டிசம்பர் 29ம் திகதி சனிக்கிழமைக்கான மெழுகுவர்த்தி ஏற்றும் நிகழ்ச்சியை ஈழத் தமிழர் தகவல் நிலையம் ((Eelam Thamil Information Centre - ETHIC) ஏற்பாடு செய்திருந்தது. பெருமளவில் தமிழ் மக்கள் இதில் பங்கு பற்றினர். கூடுதலான பெண்களும் சிறுவர்களும் இங்கு கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது.

ரொறன்ரோ அகதிகள் விவாகார அமைப்பின் செயற் குழுப் பிரமுகர்களான திருமதி. மிரான்டா பின்ரோ, திரு.எஸ்.திருச்செல்வம், தேக்க நிலை நடவடிக்கைக் குழுவைச் சேர்ந்த ஜனட், லான்ட்ஸ்ரவுண் தமிழர் கூட்டுறவு மாடிமனை இணைப்பதிகாரி திரு.எஸ்.சிற்றம்பலம் உட்பட பலர் இங்கு அகதிகள் நிலைபற்றி எடுத்துக் கூறினர்.

சிற்றி தொலைக் காட்சி சேவை, ரொறன்ரோ ஸ்ரார் ஆகிய வெகுஜன தொடர்புச் சாதனங்கள் இந்நிகழ்ச்சி பற்றிய விபரங்களை பிரசாரம் செய்திருந்தன. இந்த மெழுகுவர்த்தி ஏற்றும் நிகழ்ச்சி தொடர்ந்து ஒவ்வொரு சனிக்கிழமையும் பிற்பகல் ஆறு மணிக்கு நடைபெற்று வருகின்றது.

- மனோ

பட விளக்கம்: (மேலிருந்து கீழ்)
மெழுவர்த்திப் பிரார்த்தனையில் பங்குகொண்ட பெண்கள், ஆண்கள், சிறுவர்களில் ஒரு பகுதியினரை முதல் மூன்று படங்களிலும் காணலாம். கடைசிப் படத்தில் உரை நிகழ்த்திய ஜனட், மிரான்டா பின்ரோ, எஸ்.திருச்செல்வம் ஆகியோர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தமிழர் உயிர்காக்க வேண்டி உண்ணாவிரதம்

இலங்கையின் தமிழீழப்பிரதேசத்தில் ஸ்ரீலங்கா அரசு நடத்திவரும் கண்மூடித்தனமான தாக்குதலைக் கண்டித்தும், தமிழ் மக்களின் உயிர் பாதுகாப்பையும், தமிழீழத்தில் நிரந்தர அமைதியையும் வேண்டியும் கனடா தமிழர் அன்னையர் முன்னணி ரொறன்ரோ நகரில் கடந்த செப்டெம்பர் முதலாம் நாள் உண்ணாவிரதமும் பிரார்த்தனையும் நடத்தியது.

கனடா தமிழர் தேசிய மன்றத்தின் ஆதரவில் ரொறன்ரோ சென். போல்ஸ் சப்பலில் நடைபெற்ற இந்த முழுநாள் உண்ணாவிரதத்தில் ஐம்பது பெண்கள் பங்கு பற்றினர். ஆண்களும் குழந்தைகளுமாக இருநூறு பேர் இவர்களுக்கு ஆதரவு தெரிவித்து பிரார்த்தனையில் முழுநாளும் பங்குபற்றினர்.

தமிழர் தேசிய மன்றத் தலைவர் திரு.நா.சிவலிங்கம் சிறுஉரையுடன் உண்ணாவிரதத்தை ஆரம்பித்து வைத்தார். உண்ணாவிரதம் நடைபெற்ற தேவாலயத்தில் வளவு முழுவதிலும் ஆங்கிலத்திலும், தமிழிலும் ஐம்பதுக்கும் அதிகமான பதாதைகள், தமிழர் பிரச்சனைகளை விளக்கும் விதத்தில் நிறுவப்பட்டிருந்தன.

பிற்பகல் நான்கு மணி முதல் ஐந்து மணி வரை உரையரங்கு டாக்டர் நிர்மலா தலைமையில் நடைபெற்றது.

மனித உரிமைகள் அமைப்புப் பிரமுகரும், சட்டத்தரணியுமான ராகுல் இங்கு பேசுகையில் தமிழர்களின் கோரிக்கைகளை ஆதரித்து அதற்கான நியாயங்களை ஆதாரங்களுடன் எடுத்துக் கூறினார்.

மத்திய கிழக்கு நெருக்கடிச் செய்திகளை கனடிய பத்திரிகைகள் முக்கியத்துவம் கொடுத்துப் பிரசுரிப்பதால் இலங்கைச் சம்பவங்கள் மறைக்கப்படுகின்றன என்று கூறிய இவர் தமிழர் பிரச்சினைக்கு நீதியான தீர்வு நிச்சயம் கிடைக்கும் என்றும் சொன்னார்.

கனடாவில் தமிழர் சேவைகளுடன் சம்பந்தப்பட்டவர்களான திருவாளர்கள். ஞானா தேவதாஸன், எஸ்.சிற்றம்பலம், எஸ்.திருச்செல்வம் ஆகியோரும் ரொறன்ரோ பல்கலைக்கழக மாணவி ஆனந்தி அருளானந்தமும் இங்கு உரையாற்றினார்கள். திருமதி ஜனனி சிவா நன்றி தெரிவித்துப் பேசினார்.

கனடாவில் தமிழர் அன்னையர் இவ்வாறு உண்ணாவிரதம் நடத்தி, கனடிய மக்களுக்கு தமிழர் பிரச்சனைகளை இலகு வழியாகத் தெரிய வைத்தது இதுவே முதற் தடவையாகும். பெருமளவிலான கனடியர்கள் இங்கு வருகை தந்த போது, அவர்களுக்கு விரிவான விளக்கம் கொடுக்கப்பட்டதும், அவர்கள் தங்கள் தார்மீக ஆதரவை தெரிவித்ததும் குறிப்பிடத்தக்கது. திரு.சிவலிங்கம் அனைவருக்கும் பழரசம் வழங்கி உண்ணாவிரதத்தை முடித்து வைத்தார். ரொறன்ரோவிலிருந்து வெளிவரும் ரொறன்ரோ ஸ்டார், சன் ஆகிய ஆங்கில தினசரிகள் இவ் உண்ணாவிரத செய்திகளை முக்கியத்துவம் கொடுத்துப் பிரசுரித்திருந்தன.


(கொழும்பிலிருந்து வெளிவரும் தினகரன், வீரகேசரி பத்திரிகைகள் உண்ணாவிரதப் படங்களைப் பிரசுரித்து செய்திக் கட்டுரைகளையும் வெளியிட்டிருந்தன)

\- றஞ்சி









படவிளக்கம் (மேலிருந்து கீழ்)

உண்ணாவிரத்தில் பங்குபற்றிய பெண்கள், ஆதரவளித்திருந்த ஆண்கள், உண்ணாவிரதத்தைப் பார்வையிட்ட கனடியர்கள், உரையாற்றிய ஜனனி சிவலிங்கம், எஸ்.சிற்றம்பலம், ஆனந்தி ஆகியோர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*தமிழர்கள் மனதில் வைத்திருக்க வேண்டிய பெயர்*
*தமிழர்கள் நினைவில் நிலைத்திருக்க வேண்டிய பெயர்*

# சிவாஸ் ரேடிங் கோ லிமிட்

உங்கள் தேவை என்ன?
மரக்கறிகளா? கடல் உணவுகளா? மீன் வகைகளா?
இலங்கை, இந்திய உணவுப் பண்டங்களா?
தோசை, இடியப்பம், அப்பம் சுடச்சுட சாப்பிட விருப்பமா?
உங்கள் தேவை எதுவாஞல் என்ன? உடன் எங்களை நாடுங்கள்!
**நீங்கள் கேளுங்கள்! நாங்கள் தருகின்றேம்!**

திருமணங்களுக்குத் தேவையான கூறை, பட்டுவேட்டி, சால்வை, தலைப்பாகை, குத்துவிளக்கு, பூமாலைகள், மணவறை, மண்டபவசதி, விசேஷ உணவு வகைகள் உட்பட அனைத்துத் தேவைகளையும் ஒரே இடத்தில் பெற நீங்கள் உடனடியாகத் தொடர்பு கொள்ள வேண்டிய இடம்.

## SIVA'S TRADING CO. LTD

3852 Finch Ave. East, (Kennedy/Finch) Scarborough,
**Tel: 321-2739**

பார்வையில் பளிச்சிடுபவை
கண்களைக் கவர்ந்திடுபவை

## 22 கரட் தங்க நகைகள்

நங்கையர் மனம் கவரும் தங்க நகைகளின்
நம்பிக்கையான நகை வியாபாரிகள்

# பாலாஸ்

584 A பார்லிமென்ட் வீதி (வெலஸ்லி சந்தி) ரொறன்ரோ

Phone: (416) 924-7890 Fax: 924-2713




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவிதைத் தொகுதி

கவிஞர்கள் அ. கந்தசாமி, மலையன்பன், ரதன் ஆகியோரின் **'காலத்தின் பதிவுகள்'** கவிதைத் தொகுதி வெளியீட்டு விழா கடந்த மாதம் ஸ்காபரோ வோபர்ன் கல்லூரி அரங்கில், ஈழநாடு, உதயன் பத்திரிகைகளில் உதவி ஆசிரியராகப் பணிபுரிந்த எஸ். ஜெகதீசன் தலைமையில் நடைபெற்றது. யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் புவியியல் சிரேஷ்ட விரிவுரையாளர் இ.மதனாகரன் வெளியீட்டுரை நிகழ்த்தினார். பிரபல எழுத்தாளர் நவம் தலைமையில் கவியரங்கும், மற்றும் விமர்சன அரங்கும் இங்கு இடம்பெற்றன. தாயகம் பத்திரிகையின் ஆசிரியர் ஜோர்ஜ் குருஷேவ் விழாவில் சிறப்புரை நிகழ்த்தினார்.

## BACKLOG REFUGEES
## தேக்க நிலை அகதிகள்

தேக்க நிலையிலுள்ள அகதிகள் (Backlog Refugees) விசாரணைகளை புதிய தொரு திட்டத்தின் கீழ் துரிதமாக்க வேலைகள் ஆரம்பமாகியுள்ளது. Paper Screening என்று கூறப்படும் பத்திரங்களை பரிசீலித்து தீர்மானிக்கும் திட்டத்தின் கீழ், தேக்க நிலையில் விசாரணையை எதிர்பார்த்திருப்பவர்களுக்கு. 'சுயதகவல் பத்திரம்' இப்போது தபாலில் அனுப்பப்படுகின்றது. மிஸிஸாகாவிலும், டேவிஸ்வில்லிலும் அமைந்திருக்கும் விசேஷ குடிவரவு தேக்கநிலை அலுவலகங்கள் இதனை அனுப்புகின்றன. தபாலில் கிடைக்கும் பத்திரங்கள் பூர்த்தி செய்யப்பட்டு திருப்பி அனுப்பப்படல் வேண்டும்.

சுயதகவல் பத்திரங்களை சரியாகவும், ஒழுங்காகவும் நிரப்ப வேண்டியது அவசியமாகும். குடிவரவு விசாரணைகளில் ஆஜராகும் வழக்கறிஞர்கள், கவுன்ஸலர்களின் சேவைகளைப் பெற வசதியில்லாதவர்களின் நன்மைகருதி ரொறன்ரோ பெரும்பாகத்திலும், மிஸிஸாகா பிரதேசத்திலும் சட்ட உதவி அமைப்புகள் செயற்பட்டு வருகின்றன. பொதுமக்கள் நன்மை கருதி, அங்கீகாரம் பெற்ற சட்ட உதவி அமைப்புக்களின் முழு விலாசங்கள், தொலைபேசி இலக்கத்துடன் இந்த இதழின் பதினொராம் பக்கத்தில் பிரசுரமாகின்றது. ரொறன்ரோ, பார்லிமென்ட் வீதி 517ம் இலக்கத்திலுள்ள Refugee Information Centre லும் இலவச சேவை வழங்கப்படுகின்றது. இந்த நிலையத்தின் தொலைபேசி இலக்கம் (416) 966-2233

## பொங்கல் விழா

உலகத் தமிழர் கலாசார மன்றம் வழங்கிய பொங்கல் விழா கடந்த ஜனவரி மாதம் 19ம் திகதி சனிக்கிழமை ஸ்காபரோ எஜின் கோர்ட் கல்லூரி அரங்கில் நடைபெற்றது.

பொங்கல் நடனம், சிறுவர்களின் பக்திப் பாடல் நிகழ்ச்சி, நாடகம், கனடாவில் தமிழுணர்வு மங்குவதற்கு பெரிதும் காரணம் பெரியோர்களின் வழிகாட்டலின்மையே என்னும் தலைப்பிலான பட்டி மன்றம், திரை இசை நிகழ்ச்சி ஆகியன இங்கு இடம்பெற்றன.

டிக்கட்டுக்கு நடைபெற்ற இவ்விழாவுக்கு, அரங்கம் நிரம்பி வழிய மக்கள் திரண்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

## அன்னை பூபதி கலண்டர்

கனடா தமிழர் அன்னையர் முன்னணி 1991ம் ஆண்டுக்கான கலண்டர் ஒன்றை வெளியிட்டுள்ளது. உண்ணாவிரதமிருந்து உயிர்நீத்த உலகத் தமிழ் அன்னையரின் தியாகதீபம் அன்னை பூபதி கணபதிப்பிள்ளை அவர்களின் உருவப் படத்தைத் தாங்கி இந்தக் கலண்டர் வெளியாகியுள்ளது. ஈழத் தமிழர் போராட்ட வரலாற்றில் அன்னை பூபதி அவர்களின் தியாக மரணம் முக்கியமான ஒரு மைல் கல்லாகும். அன்னாரை நினைவு கூரும் வகையில் கனடா தமிழர் அன்னையர் முன்னணி இந்தக் கலண்டரை வெளியிட்டது மிகவும் பொருத்தமானது மட்டுமன்றி, அன்னை பூபதி அவர்களின் தியாகத்திற்கு வழங்கப்பட்ட கௌரவமாகவும் அமைந்துள்ளது. இலவசமாக இந்தக் கலண்டர் வழங்கப் பெறுகின்றது.


"பல்லுப் போனால் சொல்லுப் போச்சு"

உங்கள் பற்கள் சம்பந்தப்பட்ட நோய்களை தமிழில் எடுத்துக் கூறி நிவாரணம் பெற பல் டாக்டர் ஒருவர் இல்லையே என்ற கவலை இனிமேல் உங்களுக்கு இல்லை

கனடிய அரசின் அங்கீகாரம் பெற்ற பல் வைத்தியர்

**டாக்டர் அ. சண்முகவடிவேல்**

அவர்களின் சேவை இப்போது கிடைக்கிறது

இலங்கை, நைஜீரியா, இங்கிலாந்து ஆகிய இடங்களில் பல் வைத்திய அதிகாரியாகப் பணியாற்றிப் புகழ் பெற்றவர் **டாக்டர் அ. சண்முகவடிவேல்**

**MAIN SQUARE MEDICAL & DENTAL CENTRE**

2575 Danforth Ave., Toronto, Ontario, M4C 1L5

Phone: **(416) 690-0176**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையரின் அகதிநிலை மனுக்கள் நிராகரிக்கப்படுவது அதிகரிக்கிறது

1989ம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதிக்குப் பின்னர், பெருமளவிலான இலங்கையர்கள் கனடாவுக்கு அகதிகளாக வந்துள்ளனர். இந்தத் தொகை முன்னர் எப்போதும் இல்லாததைவிட அதிகரித்துள்ளதை கனடிய அரசின் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. அதேசமயம், அகதிநிலை விசாரணையின் பின்னர் மனுநிராகரிக்கப்படுபவர்களின் தொகையும் இப்போது அதிகரித்து வருவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

கனடிய குடிவரவு இலாகாவின் புள்ளிவிபர தகவற் பிரிவு, மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை இது தொடர்பான விபரங்களை வெளியிட்டு வருகின்றது. 1990ம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களினதும் புள்ளிவிபரங்கள் இதுவரை வெளியாகியுள்ளன. இதன் பிரகாரம், அகதி நிலை விசாரணையின் பின்னர் இங்கு நிரந்தரமாகக் குடியிருக்க அனுமதி பெறும் இலங்கையரின் தொகை, விகிதாசார ரீதியாகக் குறைந்து வருவது தெரியவந்துள்ளது.

1989ம் ஆண்டில் 95 வீதமான இலங்கையரின் அகதி நிலை மனு விசாரணையின் பின்னர் ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஆனால் 1990ம் ஆண்டில், ஜனவரி முதல் செப்டெம்பர் மாதம் வரை, இது 89 வீதமாகக் குறைந்துள்ளது.

1989ம் ஆண்டு முழுவதிலும் மொத்தம் 50 இலங்கையரின் மனுக்கள் மட்டுமே நிராகரிக்கப்பட்டது. இதில் 5 பேர் முதற்கட்ட விசாரணையினும், 45 பேர் பூரண விசாரணையின் பின்னரும் நிராகரிக்கப்பட்டனர். ஆனால் 1990ம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களிலும் 167 பேரின் மனு நிராகரிக்கப்பட்டுள்ளது. இதில் 4 பேர் முதற்கட்ட விசாரணையிலும், 164பேர் பூரண விசாரணை யின் பின்னரும் நிராகரிக்கப்பட்டுள்ளனர்.

1990ம் ஆண்டின் 12 மாதங்களினதும் புள்ளிவிபரங்கள் வெளிவரும் போது நிராகரிப்புக்குள்ளான இலங்கையரின் தொகை இருநூறைத் தாண்டலாம் என்று அஞ்சப்படுகின்றது.

இவ்வாறு அகதிநிலை மனு நிராகரிக்கப்பட்டவர்கள் என்ன செய்கிறார்கள்? இது பலருக்கும் தெரியாது. அகதி நிலை மனு நிராகரிக்கப்பட்டவர்கள் கூடுதலாக தமிழ் இளைஞர்கள், யுவதிகள் என்பது கவனிக்கப்படவேண்டியது. இவ்விடயங்கள் ஈழத் தமிழர் தகவல் நிலையத்தின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது. கத்தோலிக்க குடிவரவு நிலையத்துக்கும் சிலர் நேரில் சென்று தங்கள் பிரச்சனையை எடுத்துக் கூறினர்.

அகதிநிலை மனு நிராகரிக்கப்பட்ட பலருக்கு நாட்டைவிட்டு வெளியேற்றும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டு அதற்கான காலம், நேரம் நிர்ணயிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

வெளியேற்ற உத்தரவுக்குள்ளாகும் அகதிகளின் நலன்களைக் கவனிக்கவென விஜில் (Vigil) என்ற அமைப்பு ரொறன்ரோவில் அரும்பணி புரிந்து வருகின்றது. சமுக சேவை ஊழியர்களும், தொண்டர்களும் இந்த அமைப்பின் ஊடாக மேற்படி அகதிகள் தொடர்பான மேல் நடவடிக்கைகளைக் கவனித்து வருகின்றனர். இதுவரை சுமார் 20 பேர் மீதான நாடுகடத்தும் உத்தரவு 'விஜில்' எடுத்த நடவடிக்கையினால் நிறுத்தப்பட்டுள்ளது. சிலருக்கு 'அமைச்சரின் பத்திரம்' (Minister's Permit) கிடைத்துள்ளது.

தங்கள் அகதிநிலை மனு நிராகரிக்கப்பட்டவர்களும் நாடுகடத்தும் உத்தரவுக்குள்ளானவர்களும் விஜில் அமைப்புடன் தொடர்பு கொள்ளலாம். மொழிப் பிரச்சனை உள்ளவர்கள் அல்லது நேரடியாகத் தொடர்பு கொள்ள முடியாதவர்கள் (416) 920-9250 இலக்கத்துடன் தொடர்பு கொண்டால் ஏற்பாடு செய்து கொடுக்கப்படும்.

## ரீட்டாவுக்கு புதிய பதவி



ஸ்காபரோவிலுள்ள வரவேற்பு இல்லத்தில் (Welcome House) ஆலோசகர்களில் ஒருவராகக் கடைமையாற்றிய **திருமதி.ரீட்டா பார்த்திபன்** தற்போது சனத்தொகை மதிப்பீடு திணைக்களத்தில் புதிய நியமனம் பெற்று அங்கு தனது கடமைகளை ஆரம்பித்துள்ளார்.

இங்கு வாழும் தமிழ் மக்களுடன் நீண்ட காலப் பரிச்சயமும், நெருங்கிய பிணைப்பும் கொண்ட ரீட்டா, கனடா தமிழர்களின் வாழ்விலும், வளமான உயர்விலும் நெருங்கிய தொடர்பு கொண்டவர் என்றால் மிகையாகாது. ரொறன்ரோ மாநகர பெரும்பாக வரவேற்பு இல்லங்களில் கடமை புரிந்த ஆலோசகர்களில் இவர் ஒருவர் மட்டுமே தமிழராக இருந்ததால், தமிழ் மக்கள் கூடுதலாக இவரிடமே சேவை பெறுவதற்காகச் செல்லும் தேவை எழுந்தது.

கடந்த ஏழு வருடங்களாக சினக்காது, மனம் கோணாது சிரித்த முகத்துடன் ரீட்டா வழங்கிய சேவைகளை அறியாதவர் இருக்க மாட்டார்கள். குறிப்பாக தமிழ் மாணவர்கள் உயர் கல்வி பெறுவதில் இவர் காட்டிய பெரும் ஆர்வம் குறிப்பிடப்பட வேண்டியது.

ரீட்டா பார்த்திபன் என்ற பெயர் கனடா வாழ் தமிழர் இல்லங்களில் "குடும்பப் பிள்ளை"யின் பெயர் போன்று பிரபல்யமடைந்துள்ளமை, இவரது சீரான, சிறப்புமிகு சேவைக்குக் கிடைத்த நற்சான்று

.

உங்கள் கரங்களில் இருப்பது 'தமிழர் தகவல்' இதழின் முதற்பிரதி. முழுமையான சேவை நோக்குடன் இதனை வெளியிடுகின்றோம். இதிலுள்ள தகவல்கள் இங்கு புதிதாக வந்து குடியேறுபவர்களுக்கு மட்டுமன்றி ஏற்கனவே வசித்து வருபவர்களுக்கும் தேவையானவை. இதனை வாசித்து முடித்த பின்னர், நீங்கள் வைத்திருக்க வேண்டுமென்ற அவசியமேற்படவில்லையெனில், உங்கள் நண்பர்களுக்கோ, உறவினர்களுக்கோ வழங்கலாம். நிச்சயமாக இது அவர்களுக்குப் பயன்படும். உங்கள் நண்பர்கள், உறவினர்கள் எவருக்காவது இதன் பிரதி ஒன்று தேவையெனில், இப்பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியுடன் தொடர்பு கொண்டு அறிவியுங்கள். நாம் அவர்களுக்கு தபாலில் அனுப்பி வைப்போம். தயவு செய்து சரியான தபால் முகவரியை எழுதி அனுப்புங்கள். நீங்கள் உங்கள் வசிப்பிடத்தை மாற்றும்போது, உங்கள் புதிய முகவரியை உடனடியாக எமக்குத் தெரியப்படுத்த மறவாதீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரொறன்ரோ பெரும்பாகத்திலும், மிஸிஸாகா பகுதிகளிலும் செயற்படும் சமூக, சட்ட உதவி நிலையங்கள்

(முகவரிகள் தொலைபேசி இலக்கங்களுடன்)

Advocacy Centre for the Elderly
120 Eglinton Avenue East, Suite 902
487-7157
(On Eglinton Avenue east of Yonge Street)

Advocacy Resource Centre for the Handicapped
40 Orchard View Boulevard, Suite 255
482-8255
(West of Yonge Street, north of Eglinton Avenue)
TDD number (for the hearing impaired only): 482-1254

Bloor Information and Legal Services
1072 Dovercourt Road
531-7376
(Southwest corner of Dovercourt Road and Dupont Street)

Canadian Environmental Law Association
517 College Street, Suite 401
960-2284
(On College Street, west of Bathurst Street)

Centre for Spanish-Speaking Peoples
1004 Bathurst Street
533-0680
(On Bathurst Street, 3 blocks north of Bloor Street)

Community Legal Assistance Services Program (CLASP)
York University
Osgoode Hall Law School
4700 Keele Street, Downsview
736-5029

Downsview Community Legal Services
520 Wilson Heights Boulevard
635-8388
(Southwest corner of Wilson Heights Boulevard and Sheppard Avenue)

Downtown Legal Services
91 St. George Street
978-6447
(On St. George Street, north of Harbord Street)

East Toronto Community Legal Services
930 Queen Street East
461-8102
(On Queen Street, east of Logan Avenue)

Flemingdon Community Legal Services
10 Gateway Boulevard, Suite 350
424-1965
(Southeast corner of Gateway Boulevard and Don Mills Road)

Industrial Accident Victims Group of Ontario
845 St. Clair Avenue West, Suite 304
651-5650
(On St. Clair Avenue, west of Christie Street)

Injured Workers' Consultants
815 Danforth Avenue, Suite 402
461-2411
(On Danforth Avenue, east of Pape Avenue)

Jane Finch Community Legal Services
1315 Finch Avenue West, Suite 409
398-0677
(Southeast corner of Finch Avenue and Keele Street)

Justice for Children and Youth
720 Spadina Avenue, Suite 405
920-1633
(On Spadina Avenue, south of Bloor Street)

Kensington-Bellwoods Community Legal Services
226 Bathurst Street
363-0304
(On Bathurst Street, 2 blocks north of Queen)

Landlord's Self-Help Centre
110 Atlantic Avenue
532-4467
(East of Dufferin Street, south of King Street)

Metro Tenants Legal Services
720 Spadina Avenue, Suite 410
(On Spadina Avenue, south of Bloor Street)
926-9693 for summary advice by telephone

Metro Toronto Chinese and Southeast Asian Legal Clinic
180 Dundas Street West
Suite 308, 3rd Floor
971-9674
(Northeast corner of Dundas Street and University Avenue)

Mississauga Community Legal Services
130 Dundas Street East, Suite 501A
896-2050
(On Dundas Street, east of Highway 10)

Neighbourhood Legal Services
333 Queen Street East
861-0677
(South side of Queen Street, west of Parliament Street)

Parkdale Community Legal Services
1239 Queen Street West
531-2411
(On Queen Street, west of Dufferin Street)

Rexdale Community Information and Legal Services
1530 Albion Road
741-1553
(At Albion Road and Kipling Avenue, in the Albion Shoppers World Mall)

Scarborough Community Legal Services
695 Markham Road, Suite 9
438-7182
(Northeast corner of Markham Rd. and Lawrence Ave., in Cedar Heights Plaza)

South Etobicoke Community Legal Services
2970 Lakeshore Boulevard West
Suite 303
252-7218
(On Lakeshore Boulevard, 1 block west of Islington Avenue)

West Scarborough Community Legal Services
565 Kennedy Road South, Unit 6
264-4384
(On Kennedy Road, 3 blocks south of Eglinton)

Willowdale Community Legal Services
5 Fairview Mall Drive, Suite 385
492-2437
(Off Don Mills Road, 2 blocks north of Sheppard Avenue)

Workers' Health and Safety Legal Clinic
180 Dundas Street West, Suite 201
971-8832
(On Dundas Street just east of University)

York Community Services
1651 Keele Street
653-5400
(On Keele Street, south of Eglinton Ave.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SPONSOR பராமரிப்பு ஒப்பந்தமிருந்தாலும் பொதுநல உதவிபெற இடமுண்டு

கனடிய குடிவரவு சட்டத்தின் கீழான பராபரித்துப் பொறுப்பேற்கும் ஒப்பந்தம் (Sponsor Agreement) சம்பந்தமாக சில திருத்த முறைகள் இவ்வருடத்திலிருந்து நடைமுறைக்கு வந்துள்ளது.

கனடாவுக்குப் புதிதாக வந்துள்ள ஒருவர்/குடும்பம், இங்குள்ள நிரந்தரக் குடியிருப்பாளர் ஒருவரால் பராமரித்துப் பொறுப்பேற்கப்படுவார் என்ற ஒப்பந்தத்துக்கு உட்பட்டவராயினும், அவ்வாறு பராமரிக்கப்படாதவேளைகளில், பொது நல உதவிப் பணத்தை (General Welfare Assistance) இலகுவாகப் பெற முடியும்.

Sponsor செய்தவர், அதாவது பராமரிப்புப் பொறுப்புக்கு ஒப்பந்தம் செய்தவர் தற்போது தொழில் இல்லாத காரணத்தால் வேலையற்றோர் காப்புறுதிப் பணம் பெறுபவராக அல்லது சுகவீனம் காரணத்தால் அரசாங்க உதவிப் பணம் பெறுபவராக இருந்தால், அவரால் இன்னொருவரை/குடும்பத்தைப் பராமரிப்பது கடினமாக இருக்கலாம்.

இவ்வாறான வேளைகளில் பராமரிப்புப் பொறுப்புக்கு ஒப்பந்தம் செய்தவரை எந்தவகையிலும் பாதிக்காத வகையில் புதிய குடிவரவாளர் Welfare எனப்படும் உதவிப் பணத்தைப் பெறமுடியும். இதற்காக குடிவரவு இலாகாவுக்கோ, வேறு அரசாங்க அலுவலகங்களுக்கோ செல்லத் தேவையில்லை.

மேற்படி உதவிப் பணம் வழங்கும் சமூக சேவை இலாகாவுடன் (Community Services Dept) தொடர்பு கொண்டால் அவர்களே சகல ஏற்பாடுகளையும் செய்வார்கள். முதலில் உங்கள் பகுதிக்கான சமூகசேவை இலாகா எங்கு அமைந்துள்ளது என்பதைச் சரியாக அறிந்து கொண்டு, அந்த அலுவலகத்துடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளுமாறு அதிகாரிகள் ஆலோசனை கூறியுள்ளனர்.


தங்க மேனி நங்கையரின்
தளிர் ஒளிக்கு மெருகூட்டுபவை

ஸ்ரீ சிவா தங்க நகைகள்

நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக
அழகுக்கு அழகூட்டும் நகைகளை
வண்ண வண்ண டிசைன்களில் வழங்குபவர்கள்

ஸ்ரீ சிவா ஜுவலறி

721 Bloor St. W, Suite 2C, Toronto, Ontario
(416) 531-4867




பிரின்டிங், கனடா: 975-0196

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org